# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, மாச்சு மாதம் 31 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா** **தபாற் செலவு : ரூபா**

## 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

[2006 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஒ. 12/2006

**முத்திரைத் தீர்வையை மீளவிதிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் III ஆம் பாகத்தை நீக்கிவிடுவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1.** (1) இச்சட்டம், 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், 2006, ஏப்பிறல் 1 ஆம் தேதியிலிருந்து பயனுடையதாதல் வேண்டும்.

இச்சட்டத்தைச் செயற்படுத்து வதற்கான பொறுப்புடைமை ஆணையாளர் தலைமை யதிபதிக்குப் பொறுப்பிக்கப் பட்டுள்ளது.

**2.** ஆணையாளர் தலைமையதிபதிக்கு இச்சட்டத்தின் தகுந்த செயற்பாடும் நிருவாகமும் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

### அத்தியாயம் I

### முத்திரைத் தீர்வையை விதித்தலும், விலக்களிப்புகளும், ஏற்புடைத்தற்பாலதான நடவடிக்கைமுறையும்

சாதனங்களும் ஆவணங்களும் மீது முத்திரைத் தீர்வை இறுக்கப்படுதல்.

**3.** (1) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் -

(அ) இலங்கையில் எழுதி நிறைவேற்றப்படும், வரையப்படும் அல்லது முன்வைக்கப்படும் ; அல்லது

(ஆ) சாதனமொன்று இலங்கையில் முன்வைக்கப்பட்ட நேரத்தில், இலங்கையில் அமைந்துள்ள ஆதனம் தொடர்பான சாதனமாகவுள்ளதும் இலங்கைக்கு வெளியே எழுதி நிறைவேற்றப்படுவதுமான,

ஒவ்வொரு "குறித்துரைக்கப்பட்ட சாதனத்தின்" மீதும், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் தீர்மானிக்கக்கூடிய வாறான அத்தகைய வீதத்தில் (இதனகத்துப்பின்னர் "முத்திரைத் தீர்வை" எனவழைக்கப்படவேண்டிய) தீர்வையொன்று இறுக்கப்படுதல் வேண்டும்.

(2) வெவ்வேறு வகுப்பினவான அல்லது வகுதியினவான சாதனங்கள் தொடர்பில் வெவ்வேறு வீதங்கள் தீர்மானிக்கப் படலாம்.

(3) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்படும் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும். அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும், அது ஆக்கப்பட்டதிலிருந்து மூன்று மாதங் களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும். அத்தகைய காலப்பகுதியினுள் பாராளுமன்றத்தின் கூட்டமெதுவும் நடாத்தப்படாவிடின், அத்தகைய கட்டளையானது, அதன்பின்னர் உடனடியாக நடாத்தப்படுகின்ற பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தில் அங்கீகாரத்துக்காக அவ்வாறு இடப்படுதல் வேண்டும்.

(4) பாராளுமன்றத்தினால் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் கட்டளை, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். அக்கட்டளையானது அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதான தேதி பற்றிய அறிவிப்பு, கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

குறித்துரைக் கப்பட்ட சாதனங்கள்.

**4.** மூன்றாம் பிரிவின் நோக்கங்களுக்காக, "குறித்துரைக்கப்பட்ட சாதனம்" என்பது –

(அ) சத்தியக்கடதாசியொன்று ;

(ஆ) காப்புறுதிப் பூட்கையொன்று ;

(இ) பிரசித்த நொத்தாரிசு ஒருவராகச் செயலாற்றுவதற் கான ஆணைப்பத்திரமொன்று ;

(ஈ) உரிமம் வைத்திருப்பவர் ஏதேனும் வியாபாரத்தை, தொழிலை உயர்தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு அவருக்கு அதிகாரமளிக்கின்ற உரிமமொன்றாகவுள்ள, அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத் திலான சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்டதொரு காலத்துக்கு வழங்கப்பட்ட உரிமமொன்று ;

(உ) ஒரு கடன் அட்டையொன்றைப் பயன்படுத்தி செய்து கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கலொன்று தொடர்பில் வருமதியாகவுள்ள எடுத்துக்கூறப்பட்ட பணத் தொகையொன்றைக் கொடுப்பனவு செய்வதற்காக, கடன் அட்டையொன்றை வைத்திருப்பவருக்குச் சேவை வழங்குநரொருவரினால் செய்யப்படும் உரிமைக் கோரிக்கையொன்று, கோரிக்கையொன்று அல்லது வேண்டுகோளொன்று ;

(ஊ) புதிய அல்லது மேலதிக வழங்குகையின் மீதான அல்லது கைமாற்றத்தின் அல்லது சாட்டுலின்மீதான பங்குச் சான்றிதழொன்று ;

(எ) ஏதேனும் திட்டவட்டமானதும், நிச்சயமானதும், ஏதேனும் ஆதனத்தைப் பாதிப்பதுமானதுமான பணத் தொகைக்கான முறியொன்று அல்லது ஈடொன்று ;

(ஏ) வாக்குறுதிப்பத்திரமொன்று ;

(ஐ) ஏதேனும் ஆதனத்தின் குத்தகை அல்லது வாடகை யொன்று ;

(ஒ) ஏதேனும் பணத்துக்காக அல்லது வேறு ஆதனத் துக்காகக் கொடுக்கப்பட்ட பற்றுச்சீட்டொன்று அல்லது பொறுப்பு விடுவிப்பொன்று ;

(ஓ) அமைச்சர், இலங்கையின் பொருளாதார முன்னேற் றத்தின் நலன்கருதி, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் குறித்துரைக்கும் வேறேதேனும் சாதனங்கள்,

என்று பொருளாகும்.

விலக்களிப்புக்கள்.

**5.** இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்தும் அதன் பின்னரும், அமைச்சர் காலத்துக்குக்காலம், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், முத்திரைத்தீர்வையிலிருந்து விலக்களிக்கப்படவேண்டிய சாதனங்களைக் குறித்துரைக்கலாம்.

எவரினாற் முத்திரைத் தீர்வை செலுத்தப் படற்பாலது என்பது.

**6.** முரணான உடன்படிக்கையொன்றுள்ளவிடத்தான விடயங் களிற்றவிர முத்திரைத்தீர்வையானது -

(அ) காப்புறுதிப் பூட்கையொன்றின் விடயத்தில், காப்பறுதியைச் செய்யும் ஆளினால் ;

(ஆ) ஏதேனும் பங்கினது கைமாற்றத்தின் அல்லது சாட்டுதலின் விடயத்தில், அத்தகைய பங்கின் கைமாற்றம் பெறுநரினால் அல்லது சாட்டுதல் பெறுநரினால் ;

(இ) குத்தகையொன்றின் விடயத்தில், குத்தகை பெறுநரினால் ;

(ஈ) சேவை வழங்குநர் ஒருவரால் கடன் அட்டை வைத்திருக் கும் ஒருவரிடமிருந்து ஓர் உரிமைக்கோரிக்கையின், கோரிக்கையின் அல்லது வேண்டுகோளின் விடயத்தில் கடன் அட்டை வைத்திருப்பவரால் ; அத்துடன்

(உ) வேறெல்லா விடயங்களிலும், அத்தகைய சாதனத்தை வரைகின்ற, தயாரிக்கின்ற அல்லது எழுதி நிறைவேற்றுகின்ற ஆளினால்,

செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

முத்திரைத் தீர்வையை ஒருங்கு கூட்டுதல்.

**7.** (1) ஆறாம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும்,-

(அ) காப்புறுதிப்பூட்கைகளை வழங்குகின்ற எவரேனுமாள் ;

(ஆ) உரிமங்களை வழங்குகின்ற எவரேனும் அதிகாரி ;

(இ) ஒரு கடன் அட்டையைப் பயன்படுத்தியதன்மீது ஏதே னும் பணக்கொடுப்பனவுக்காக ஓர் உரிமைக்கோரிக் கையை அல்லது வேண்டுகோளை முன்வைப்பதன் மேல் எவரேனும் சேவை வழங்குநர் ;

(ஈ) ஊழியர்களுக்குச் செய்யப்படும் கொடுப்பனவுக்கான பற்றுச்சீட்டுகளை ஏற்றுக்கொள்ளும் நூறுக்கு மேற்பட்ட ஆட்களைத் தொழிலுக்கமர்த்துகின்ற எவரேனும் தொழில்தருநர் ; அத்துடன்

(உ) விதித்துரைக்கப்பட்ட நேரத்திலும் முறையிலும், ஒரு வகுதியினவான சாதனங்களுக்கு முத்திரையிடும் செயல்முறைக்குகந்ததற்ற தன்மையை அல்லது உசிதமற்ற தன்மையைக் கருத்திற்கொண்டு, அத்தகைய வகுதியினதான வேறேதேனும் சாதனத்தை வழங்குகின்ற வேறெவரேனுமாள்,

ஆணையாளர் தலைமையதிபதியால் எழுத்தில் அனுமதிக்கப்படின், முறையே அத்தகைய காப்புறுதிப் பூட்கைகள், உரிமம், உரிமைக் கோரிக்கை, சாதனம், பற்றுச்சீட்டு அல்லது வேறு சாதனம் தொடர்பில் முத்திரைத்தீர்வையாக வருமதியாகவுள்ள தொகையை ஒருங்கு கூட்டுதல் வேண்டுமென்பதுடன், வேறுவகையாகப் பணிக்கப்பட்டாலொழிய, ஒவ்வோராண்டும் மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய தேதிகளில் முடிவடைகின்ற இயைபான காலாண்டின் முடிவிலிருந்து பதினைந்து நாட்களினுள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய தொகையை ஒவ்வொரு காலாண்டும் அனுப்பிவைத்தலும் வேண்டும் :

ஆயின், இச்சட்டத்தின் நியதிகளின்படி முத்திரைத்தீர்வையாக வருமதியாகவுள்ள தொகையை ஒருங்கு கூட்டுகின்ற எவரேனுமாள், ஆணையாளர் தலைமையதிபதியுடன் பதிவுசெய்தலும் அவ்வாறு தேவைப்படுத்தப்படின், ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய படிவத்திலான முறியொன்றைச் செய்துகொள்ளுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி ஒருங்கு கூட்டப்பட்டுள்ள ஏதேனும் முத்திரைத் தீர்வை செலுத்தப்படுமிடத்து, அத்தகைய தீர்வையை ஒருங்கு கூட்டுவதற்கு அதிகாரமளிக்கப்படும் ஆள் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்ட ஓர் தொழில்தருநர் தவிர), முத்திரை தீர்வையைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஆளுக்கு, பொருளளவில் கீழே தரப்பட்டுள்ள படிவத்திலான சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும் :—

"..........................தொடர்பில் (சாதனத்தின் வகையைக் குறித்துரைக்கவும்) முத்திரைத் தீர்வையாகச் செலுத்தப்படற்பாலதான ............................ ரூபாவான பணத்தொகையொன்று, 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் நியதிகளின்படி சேகரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதென இத்தால் அத்தாட்சிப்படுத்தப்படுகின்றது.".

முத்திரைத் தீர்வையைக் கொடுப்பனவு செய்யும் முறை.

**8.** (1) ஏழாம் பிரிவின் நியதிகளின்படி முத்திரைத் தீர்வை ஒருங்கு கூட்டப்பட்டாற்றவிர, சாதனத்தை எழுதி நிறைவேற்றும் நேரத்தில், தேவைப்படுத்தப்பட்ட பெறுமதிக்கான ஒட்டுமியல்புடைய முத்திரைகளை ஒட்டுவதன்மூலம் முத்திரைத் தீர்வை செலுத்தப்படுதல் வேண்டும் ; தீர்வையைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஆள், முத்திரைகள் மீண்டும் பயன்படுத்தப்படுவதனைத் தடுக்குமுகமாக அவ்வாறு ஒட்டப்பட்ட முத்திரையை அல்லது முத்திரைகளைச் செல்லுபடியற்றதாக்குதல் வேண்டும் :

ஆயின், இலங்கையில் எழுதி நிறைவேற்றப்படும் பங்குக் கைமாற்றங்கள், அவை எழுதி நிறைவேற்றப்படுவதிலிருந்து ஒரு மாதத்தினுள் முத்திரையிடப்படுதல் வேண்டும்.

(2) சாதனமொன்றின்மீது செலுத்தப்படற்பாலதான தீர்வை, (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட முறையில் செலுத்தப்படுமிடத்து, அச்சாதனமானது தகுந்த முறையில் முத்திரையிடப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

எங்கு முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டும் என்பது.

**9.** அரசியலமைப்புக்கான ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணங்களும் சாதனங்களும் தொடர்பில் மாகாண சபையொன்றுக்குச் செலுத்தப்படற்பாலதான எல்லா முத்திரைத் தீர்வைகளும், விடயத்திற்கேற்ப, அச்சானம் எந்தெந்த மாகாண சபையின் எல்லைகளினுள் எழுதி நிறைவேற்றப்பட்டதோ அல்லது அவ்வாதனம் எந்தெந்த மாகாண சபையின் எல்லைகளினுள் அமைந்துள்ளதோ, அந்தந்த மாகாண சபைக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் :

ஆயின், அரசியலமைப்பின் எட்டாம் அட்டவணையிற்றரப்பட்டுள்ளவாறு ஏதேனும் மாகாணத்துக்காகத் தாபிக்கப்பட்ட மகாகண சபையொன்றின் எல்லைகளினுள் எழுதிநிறைவேற்றப்படும் ஏதேனும் ஆவணத்தின் விடயத்தில், அதன்மீது

இறுக்கப்படற்பாலதான முத்திரைத் தீர்வையானது, அத்தகைய ஏதேனும் மாகாணசபை கலைக்கப்படும் பட்சத்தில், அத்தகைய மாகாணம் தொடர்பில் மாகாண சபையொன்று தாபிக்கப்படும் அத்தகைய காலம்வரை, அத்தகைய நோக்கத்துக்காக ஆணையாளர் தலைமையதிபதியினால் விதித்துரைக்கப்படும் வங்கியொன்றுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

*ஆவணம் போதிய முறையில் முத்திரையிடப் படாதவிடத்தான நடவடிக்கை முறை.*

**10.** முத்திரைத் தீர்வைக்குட்ட சாதனமொன்று உரியமுறையில் முத்திரையிடப்பட்டிருக்கவில்லையென வரிமதிப்பீட்டாளரொருவர் அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய தீர்வையைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஆளினால் அத்தகைய சாதனம் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வையின் பெறுமதியை அவர் மதிப்பீடுசெய்தல் வேண்டுமென்பதுடன், ஓர் அறிவித்தலிற் குறித்துரைக்கப்படும் காலத்தினுள் அதன் மீது வருமதியாகவுள்ள தொகையைச் செலுத்தும்படி அவரைத் தேவைப்படுத்தி அத்தகைய ஆளுக்கு அறிவித்தலை அனுப்பி வைத்தலும் வேண்டும்.

*உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையன வாதல்.*

**11.** வரிமதிப்பீடு, மேன்முறையீடுகள், மேன்முறையீடுகளைத் தீர்மானித்தலும் வரிமதிப்பீடுகளின் இறுதியாந்தன்மையும் அத்துடன் வருமானவரியை அறவிடுதல் அல்லது மீளளித்தல் என்பன தொடர்பான உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் XVIII முதல் XXIV வரையிலான அத்தியாயங்களின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், இச்சட்டத்தின் கீழான வரிமதிப்பீடு, மேன்முறையீடுகள், மேன்முறையீடுகளைத் தீர்மானித்தலும் வரிமதிப்பீடுகளின் இறுதியாந்தன்மையும் அத்துடன் முத்திரைத் தீர்வையை அறவிடுதல் அல்லது மீளளித்தல் என்பவற்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## அத்தியாயம் II

## பொது

*ஒழுங்குவிதிகள்.*

**12.** (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது இச்சட்டத்தின்கீழ் அவை தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது அதிகாரமளிக்கப்படுகின்ற எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்கு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும்வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியாகக் கூடியவரை விரைவாக, அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின்முன்னர் இடப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டத்தின் நடைமுறை.*

**13.** இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், (அசையாத சொத்தின் கைமாற்றம் அல்லது மோட்டார் வாகனத்தின் கைமாற்றம் தொடர்பிலான ஏதேனும் சாதனத்தின்மீது அல்லது நீதிமன்றில் கோப்பிடப்பட்ட ஆவணத்தின்மீது அல்லாத) முத்திரைத் தீர்வையை விதித்தல், விலக்களிப்புகள், மற்றும் வேறேதேனும் ஏற்பாடு என்பன தொடர்பான 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அவை ஒவ்வாதனவாகவிருக்கும் அளவுவரை, செயற்பாடு எதனையும் கொண்டிருத்தலாகாதென்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

*பொருள்கோடல்.*

**14.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய —

"வரிமதிப்பீட்டாளர்" மற்றும் "ஆணையாளர் தலைமையதிபதி" என்பன, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ள அதே பொருளுடையனவாதல் வேண்டும் ;

"உண்ணாட்டரசிறைச் சட்டம்" என்பது, 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் என்று பொருளாகும்.

## அத்தியாயம் III

### 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் III ஆம் பாகத்தை நீக்கிவிடுதல்

**15.** இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் III ஆம் பாகத்தின் (பிரிவுகள் 15 முதல் 18 வரை) 2002, மே 1 ஆம் தேதியன்று தொடங்கி இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின் போது செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அப்பாகம் இத்தால் நீக்கிவிடப்படுகின்றது.

*2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தின் III ஆம் பாகத்தை நீக்கிவிடுதல்.*

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படுமிடத்து, சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

த்

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்